thiraimalar.com

# திரைமலர்

வெள்ளிக்கிழமை தோறும்

மலர்-1 இதழ்-9 .காம்

29.9.2023

## எரிமலை மவனே, நெருங்காதே நீ...

யாரை குறிப்பிடுகிறார் விஜய்...

பல்சுவை வார இதழ்

E-magazine



## விளம்பரம் தேடுபவர்கள் மத்தியில்

# பாலா செய்யும் தரமான சம்பவங்கள்

# எரிமலை மவனே, நெருங்காதே நீ யாரை குறிப்பிடுகிறார் விஜய்...

## கோடி கொடுத்தாலும் குறிப்பிட்ட காட்சிகளில் நடிக்காத நடிகர்கள்

30 கோடிக்கும் மேல் சம்பளம் வாங்கும் நடிகராக உயர்ந்திருக்கிறார் சிவகார்த்திகேயன். ரஜினி, விஜயை தொடர்ந்து குழந்தைகளுக்கு பிடித்த நடிகராகவும் சிவகார்த்திகேயன் மாறியிருக்கிறார். இவர் எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் லிப்லாக் என சொல்லப்படும் உதட்டோடு உதடு முத்தம் வைக்கும் காட்சியில் நடிக்கவே கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்.

நடிகர் கார்த்தி, சிவக்குமாரின் மகன் மற்றும் நடிகர் சூர்யாவின் தம்பி, இவர் எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் சிகரெட் பிடிக்கும் காட்சியில் நடிப்பதில்லை என்ற கொள்கையினை கடைபிடித்து வருகிறார்.

நடிகர் மாதவன் அசைவம் சாப்பிடும் காட்சியில் நடிப்பதில்லை என்று படத்திற்கு ஒப்பந்தம் ஆகும் முன்பே கூறிவிட்டுதான் படத்தில் நடிக்க ஒப்புக் கொள்வாராம்.

## லஞ்சப் புகாரில் சிக்கிய சென்சார்போர்டு

மார்க் ஆண்டனி படத்திற்கு சென்சார் சான்றிதழ் வாங்க லஞ்சம் கொடுத்ததாக விஷால் வீடியோவாக வெளியிட்டு புகாரை பதிவு செய்தார், மார்க் ஆண்டனி ஒரு விஞ்ஞான ரீதியிலான படம், இந்தப் படம் மிகப் பெரிய வசூலை கொடுத்துள்ளது. இந்நிலையில் இந்தியில் மார்க் ஆண்டனி திரைப்படத்தினை வெளியிட 6.5 லட்சம் சென்சார் போர்டுக்கு லஞ்சம் கொடுத்தேன். இதில் அதிகாரி




களுக்கு 3 லட்சமும், 3.5 லட்சம் சான்றிதழ் கொடுக்கவும் என பகிரங்கமாக வீடியோவில் தெரிவித்து இருந்தார். இந்தப் பிரச்னையை மத்திய அரசு விசாரித்து வருகிறது.

## ரஜினியின் அடுத்த படத்திற்கு நெல்சன் தேர்வா?

சின்னத்திரையில் பணியாற்றி, திரைத்துறையில் நுழைந்த இயக்குநர் நெல்சன், சின்னத்திரையிலிருந்து திரைத்துறைக்கு வந்து மிகப்பெரிய அளவில் சாதிக்கலாம் என்று நினைத்தவருக்கு அச்சாணி போட்டது நடிகர் சிம்பு, நடிகர் சிம்பு நடித்த வல்லவன் படத்தில் நெல்சன் உதவிய இயக்குனராக பணிபுரிந்திருக்கிறார்.

அதே சிம்புவை வைத்து வேட்டையன்படத்தை துவக்கி பாதியில் நின்றதால், மீண்டும் சின்னத் திரையில் கமலின் பிக்பாஸ் நிகழ்ச்சிக்காக பணியாற்றினார். மீண்டும் கோலமாவு கோகிலா படத்தில் தனது காலடியை பதித்து, வெற்றி கண்டவர், டாக்டர் என்ற டார்க் காமெடி படத்தை கொடுத்து மக்கள் மனதில் பதிந்தார், பின் விஜய் பீட்ஸ் படத்தில் பணியாற்றி பல்வேறு விமர்சனத் திற்குள்ளாகி சோர்ந்தவருக்கு, ஜெயிலர் படம் ஒரு

திருப்புமுனையாக அமைந்தது, தற்போது ஜெயிலர் இரண்டாவது பாகத்தை இயக்கும் வாய்ப்பையும் நெல்சனிடமே கொடுக்க சன் பிக்சர் குழுமம் முடிவெடுத்துள்ளதாம்.

# சரத்குமாரை மறக்காத நயன்தாரா




பாலிவுட் நடிகைகள் பலர் நடிப்பை மட்டுமின்றி வியாபாரத்திலும் தங்களது காலடியை எடுத்து வைப்பது வழக்கம், அந்த வகையில் நடிகை நயன்தாரா தற்போது 9ஸ்கின் என்ற அழகு சாதன பொருட்களை தயாரிக்கும் நிறுவனத்தை துவங்கி யுள்ளார்.

சமீபத்தில் தனது கணவருடன் சேர்ந்து இந்த நிறுவனத்தை துவக்கி வைக்க நடிகர் சரத்குமாரை அழைத்துள்ளார்.

சினிமாத்துறைக்கு காலடி எடுத்து வைக்கும் போது சரத்குமாருடன்தான் முதல் படத்தில் நடித்தார் நயன்தாரா, இதனால் தற்போது சினிமாத்துறையில் கொடிகட்டி பறந்து வருகிறார். இதைப்போன்று தான் துவங்கும் முதல் தொழில் நிறுவனத்தையும் சரத்குமாரை வைத்து துவங்கி னால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும் என்று எண்ணியதால், சரத்குமாரை வைத்து தனது தொழிலை துவங்கியுள்ளார் என்று சினிமா வட்டாரத்தில் கூறப்படுகிறது.

# சந்திரமுகி 2 வெற்றியா தோல்வியா?

இயக்குநர் பி வாசு இயக்கத்தில் தயாராகி உலகம் முழுவதும் 450 க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் ‘சந்திரமுகி 2’ வெளியானது. செப்டம்பர் 28ஆம் தேதி வெளியான ‘சந்திரமுகி 2’. திரைப்படத்தை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பார்த்தார்.

அத்துடன் இயக்குநர் பி. வாசு மற்றும் ராகவா லாரன்ஸை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்தார். இதனால் படக் குழுவினர் உற்சாகமடைந்திருக்கிறார்கள்.

லைக்கா சுபாஸ்கரன் தயாரிப்பில் நடன இயக்கு நரும், முன்னணி நட்சத்திர நடிகருமான ராகவா லாரன்ஸ் கதையின் நாயகனாக நடித்துள்ளார்.

இந்த திரைப்படம் பல்வேறு எதிர்பார்ப்புகளை கடந்து அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவர்ந்து






வெற்றி பெற்றிருக்கிறது. படத்தைப் பற்றி ஒருதரப்பினர் நகட்டிவாக கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும், பலர் பாசிட்டிவ் விமர்சனங்களை அளித்துவருகின்றனர்.

இணையத்தில் தொடர்ந்து அதிகப்படியாக பேசு பொருளாக சந்திரமுகி 2 படம் இருப்பதால், இந்தப் படத்தை பார்ப்பதற்கான ஆர்வம் ரசிகர்களிடையே அதிகரித்திருக்கிறது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி ரசிக்கும் வகையில் வடிவேலுவின் காமெடி, ராகவா லாரன்ஸின் நடிப்பு, சந்திரமுகியாக நடித்திருக்கும் கங்கணா ரனாவத்தின் பேய் அவதாரம்ஞ் ஆகியவற்றால் ‘சந்திரமுகி 2’ படத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்திப்பதாக படக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

thiraimalar.com திரைமலர்

## மாறுபட்ட கதையம்சத்தில் மீண்டும் ஒரு “ஹிட்லர்”

1996 இல் மலையாளத்தில் மம்மூட்டி நடித்த படத்தின் பெயர் ‘ஹிட்லர்’. தன்னுடைய ஐந்து தங்கைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அண்ணனாக மம்மூட்டி நடித்திருப்பார். இந்த படம் தான் 1997 இல் தெலுங்கில் சிரஞ்சீவி நடிப்பில் ரீமேக் செய்யப்பட்டது. தெலுங்கிலும் மிலிட்டரி என்ற பெயரில் வெளியானது. 2003 ஆம் ஆண்டு இதே படத்தை தமிழில் சத்யராஜ் நடிப்பில் ரீமேக் செய்தனர். ஆனால் தமிழில் மிலிட்டரி என்ற படத் தலைப்பு வைத்திருந்தனர்.

தற்போது விஜய் ஆண்டனி நடித்து வெளி வரவிருக்கும் ஹிட்லர் படமும் ஆக்ஷன் திரில்லர் வகையில் ஒரு கமர்ஷியல் திரைப்படமாகவும், ஒரு அழகான காதலும் இப்படத்தில் இடம்பெற்றுள்ளது. அனைவரும் ரசிக்கும் வண்ணம் ஒரு மாறுபட்ட அனுபவமாக இப்படம் இருக்கும் என்று கூறுகிறார் இயக்குநர் தனா.

முற்றிலும் மாறுபட்ட வகையில், வித்தியாசமாக அமைந்திருக்கும் ஃபர்ஸ்ட் லுக், மற்றும் விஜய் ஆண்டனி தோற்றம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## எரிமலை மவனே, நெருங்காதே நீ யாரை குறிப்பிடுகிறார் விஜய்...

விஜய் நடித்து அக்டோபர் 19ம் தேதி வெளியாகவிருக்கும் படம் லியோ...

இந்தப் படத்திற்கு பல்வேறு தடைகள், விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளது. ஆனாலும், இந்தப்படம் குறிப்பிட்ட நாளில் வெளியிடப்படும் என்று படக்குழுவினர் தெரிவித்தவண்ணம் உள்ளனர்.




அரசியலை அதிகமாக புகுத்தியுள்ளதாக கூறப்பட்டாலும், ஆளுங்கட்சியை அடிப்படைமுதல் தாக்கி பல வசனங்கள் பேசப்பட்டுள்ளதாக கூறப் படுகிறது. மேலும் இந்தப்படத்தில் வரும் பாடல்கள் அரசியல்கட்சியினரை வம்பிழுப்பதாகவும் உள்ள தாக கூறப்படுகிறது.

அதில் ஒரு பாடலில்....

சிங்கம் எறங்குனா காட்டுக்கே விருந்து,
இவன் வேட்டைக்கு சிதறணும் பயந்து..
பெரும் புள்ளிகளுக்கெல்லாம்
முற்றுப்புள்ளி எழுதி,
குடல் உருவுற சம்பவம் உறுதி..
இதுவரையில நல்லவன் இருந்தான்,
இந்த கதையில ராட்சசன் முகம்தான்..
வத்திகுத்தி இல்ல எரிமலை மவனே,
நெருங்காதே நீ


என்ற வரிகளில் வரும் மவனே என்பது யாரை குறிக்கிறது என்று அரசியல் வட்டாரத்தில் புயலை கிளப்பி வருகிறது.

## கர்நாடகத்தில் துரத்தப்பட்ட சித்தார்த் கடுங்கோபத்தில்

நடிகர் சித்தார்த் நடிகர் மட்டுமல்ல பி.ஜே.பி. எதிர்ப்பாளரும் கூட, இவர் திராவிட கட்சிகள் மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான நடிகராக வலம் வந்தவர், இவர் வெளிப்படையாக பிஜேபி அரசை குறைகூறிவருபவர், மத்திய அரசால் மிகுந்த பாதிப்புக்குள்ளானவரைப் போன்று பல்வேறு பேட்டிகள் கொடுத்து அரசியலில் நுழையும் எண்ணத்தில் இருக்கும் இவருக்கு அரசியலில் நுழையும் சரியான தரும் கிடைக்காததால் அமைதி காத்து வருகிறார்.




இவர் சமீபத்தில் சித்தா என்ற படத்தின்புரேமோ ஷன் விழாவில் கலந்து கொள்ள கர் நாடக மாநிலத் திற்கு சென்றிருந்த போது கர்நாடக போராட்டக் குழுவினரால் பகிரங்கமாக துரத்தியடிக்கப்பட்டதால், மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளாராம், ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு எவ்வளவு ஆதரவு கொடுத்திருப்பேன், ஆனாலும் கர்நாடக ஆளும் காங்கிரஸ் அரசு சரியான நடவடிக்கை எடுக்காமல் எந்தவித பாதுகாப்பும் இன்றி போராட் டக்காரர்களை அரங்கிற்குள் அனுமதித்து அவமதித்துவிட்டதாக நெருங்கிய வட்டாரத்தில் புலம்பி வருகிறாராம்.








# சாண்டில்யன்

சிறுகதை, தொடர்கள், திரைப்படத்துறை, தேசிய உணர்வுகதைகள், நிருபர், உதவி ஆசிரியர் என்று பல்வேறு பரிணாமங்களில் மிளிர்ந்தவர் எழுத்தாளர் சாண்டில்யன், இவரது இயற்பெயர் பாஷ்யம்.

'புரட்சி பெண்' என்ற அரசியல் புதினத்தையும், நிறைய சிறுகதைகளும் எழுதியுள்ளார். 'கடல் புறா', 'யவன ராணி' 'கன்னி மாடம்','ராஜ திலகம்', 'ராஜ பேரிகை' போன்ற நூல்கள் இப்பொழுதும் விற்பனையில் முன்னணியில் உள்ளன. அவரது புதினங்களை வானதி பதிப்பகம் புத்தகங்களாக வெளியிட்டது. அவை விற்பனையில் சிகரத்தை எட்டின. முதல் வெளியீடு வந்து நாற்பது ஆண்டு களுக்குப் பின்னும் அவரது புதினங்கள் இன்னமும் அச்சில் உள்ளன.

சடகோபன் அய்யங்கார், பூங்கோதைவல்லி தம்பதியருக்கு, நாகப்பட்டினத்தில் உள்ள திருஇந்த ளூரில் 1910ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி பிறந்தார்.

திருச்சி, செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்த சாண்டில்யனுக்கு 1929 ல் திருமணம் நடந்தது. மனைவி பெயர் ரங்கநாயகி. சில வருடங்களில் குடும்பத்தோடு சென் னைக்கு வந்து தி.நகரில் குடியேறினார். அவ்வப்போது சிறு சிறு கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்த சாண்டில்யனை 'திரா விடன்' பத்திரிக்கை யில் பணி யாற்றிய நண்பர் சுப்பிரமணியன் சிறுகதை எழுதத் தூண் டினார்.

சாண்டில்யன் எழுதிய முதல் சிறுகதை 'சாந்தசீலன்'. அந்தச் சிறுகதையைப் படித்த பலரும் பாராட்டினார்கள். கதையைப் படித்த எழுத்தாளர் கல்கி எழுத்து நடையும்., சிறுகதையின் யுத்தியும் வித்தியாசமாக இருந்த தால் ஆனந்த விகடனில் சிறுகதைகள் எழுதும் வாய்ப்பை அளித்தார். 'கண்ணம்மாவின் காதலி', 'அதிர்ஷ்டம்' போன்ற சிறுகதைகள் ஆனந்த விகடனில் வெளிவந்தன. எழுத்தார்வம் அதீதமாக, அது சார்ந்த துறையிலேயே பயணிக்க விரும்பிய சாண்டில்யன், சுதேசமித்திரன் இதழில் சேர்ந்தார். 1935 முதல் 1945 வரை நிருபராகவும், உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்தார். சென்னை உயர்நீதிமன்ற செய்திகளை எழுதும் பணி சாண்டில்யனுக்கு கொடுக்கப்பட்டது. 1937 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியைப் பேட்டி எடுத்தப் பெருமையும் சாண்டில்யனுக்கு உண்டு.

எழுத்துத் துறையில் இமயம் தொட்ட சாண்டில் யன், அதன் தொடர்ச்சியாக திரைப்படத் துறையி லும் கால்பதித்தார். 'அம்மா' 'தியாகய்யா' 'என் வீடு' போன்ற திரைப்படங்களுக்கு திரைக் கதைகள் எழுதினார்.

சினிமா சார்ந்த தனது அனுபவங்களை 'சினிமா வளர்ந்த கதை' என்ற பெயரில் எழுதவும் செய்தார். தொடக்கத்தில் சமூகக் கதைகளையும், தேசிய உணர்வு, விடுதலைப் போராட்டம் சார்ந்த கதைகளையும் எழுதிய சாண்டில்யன் காலப்போக்கில் சரித்திர நாவல்களின் பக்கம் நகர்ந்தார். அவரது சரித்திர கதைகள் பல்வேறு இதழ்களில் வெளிவரத் துவங்கின. 48 வரலாற்று புதினங்களை எழுதிய சாண்டில்யன். 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 11இல் மரணமடைந்தார்.



கதை, கவிதை, நேர்காணல், துணுக்கு செய்திகள், ஜோக், சினித்துறை செய்திகள் அனைத்தையும் வரவேற்கிறோம்.

## நமது இதழில் உங்கள் படைப்பு வெளிவரவேண்டுமா?

சாதனையாளர், தொழில்முனைவோர், கல்வியாளர், கலைத்துறையினர், சமூக சேவையாளர், சிந்தனையாளர், கவிஞர் என அனைத்து துறையினரின் சாதனைகளையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்த எங்களை தொடர்பு கொள்ளவும்.

**+ 9 1 9 4 4 4 2 6 4 6 1 0**



# நேர்மைக்கு சாட்சியாக அரசாண்ட மன்னர்கள்

மனிதனாக வாழ சில தகுதிகள் வரையறுக்கப் பட்டுள்ளது. பொதுவாக உண்மை, நேர்மை, பாவ, புண்ணியம் பார்ப்பது போன்றவைஅடிப்படை தகுதிகளாக இருந்தாலும், இப்போதையசமுதாயத்தில் வாழும் மனிதர்கள் இவற்றை பின்பற்றுவதில் பல்வேறு இன்னல்கள் இடைஞ்சல்கள் இருப்பதாலும், சொகுசான வாழ்வு வாழ மேற்கண்டவை தடையாக இருப்பதாலும் மக்கள் இவற்றை துறந்து, முன்னோர் கூறிய கட்டுப்பாடான வாழ்க்கையை துறந்து எப்படியும் வாழலாம் என்ற சுதந்திர வாழ்க்கை வாழ்கின்றனர்.

இதிலும் அரசாட்சி நடத்தும் அரசியல் தொடர்புடையவர்கள் சுதந்திர வாழ்க்கையையும் தாண்டி சொகுசு வாழ்வு வாழ்வதால் அவர்களின் குடும்பங்கள் வசதி வாய்ப்போடு இருக்கின்றதே தவிர பொதுமக்களின் வாழ்வாதாரம் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகிறது.

ஆனாலும், நமது முன்னோர் அதுவும் நம்மை ஆண்ட அரசர்களில் பலர், எவ்வளவு சொத்து, சுகம், சுகபோக வாழ்க்கை வாழும் வாய்ப்பு கிடைத்த போதும் நேர்மை என்ற ஒரு பதத்தை பிடித்து வாழ்ந்து சாதனைப்படைத்துள்ளனர்.

இன்றுவரை அவர்களை மக்கள் மறக்காமல் இன்றுவரை போற்றி புகழுகின்றனர் அந்த வகையில் சேரர், சோழர், பாண்டியர், சாளுக்கியர், சோலங்கி, ஹொய்சாளர், என வித்தியாசம் இல்லாமல் நேர்மையாக வாழ்ந்துள்ளனர் நமது மன்னர்கள்.

அந்தவைகயில் ஒருசிலரை மட்டும் பார்ப்போம்.

## சிபிசோழன்

போர் களத்தில் புறா ஒன்றை கழுகு துரத்திக் கொண்டு வந்தது. அந்த புறா சிபி சோழனின் மேல் அமர , புறா தன்னிடம் அடைக்கலமானதாக அவர் எண்ணி அதை கழுகுகிடமிருந்து காக்க எண்ணுகிறார். மனுநிதிப்படி புறாவை கழுகு கொல்லுதல் பாவமாகது. அதே வேளையில்கழுகின் உணவான புறாவையும் ராஜநீதிப்படி அரசன்காக்க வேண்டும் கழுகிற்கும் உணவளிக்க வேண்டும். போரில் குற்றுயிராய் கிடந்த சோழன் தன் தொடை சதையை வெட்டி வெட்டி கழுகிற்கு உணவளித் தான். புறாவிற்கு அபயமும், கழுகிற்கு இரையையும் அளித்து இரு புறமும்நேர்மையை நிருபித்த அரசன்.

## பொற்கைப் பாண்டியன்

யாரும் அறியாமல் இரவில் நகர்வலம் வரும் பாண்டியன் ஒரு வீட்டில் பேசியதை கேட்டான். மறுநாள் அந்த பிரச்சனை இருக்கிறதா என்பதை அறிய கதவருகில் நின்று கொண்டிருந்தவன் அறியாமல் கதவை தட்டி விட்டான். ஒரு வீட்டில் இரவில் கதவை தட்டினால் அந்த வீட்டு பெண்ணை தவறாக எண்ணக் கூடும் என்று வீதியில் உள்ள அனைத்து வீட்டு கதவுகளை தட்டிவிட்டு வந்தார். விடிந்ததும் மக்கள் அனைவரும்திருடன் தான் கதவை தட்டியதாக எண்ணிக் கொண்டு பாண்டியனிடம் முறையிட்டனர். அந்த திருடனை கண்டறிந்து அவனது கையை வெட்ட வேண்டும் என்று அரசனிடம் கூறினார். உடனே வாளை உருவி தன் கையை துண்டாக வெட்டிக் கொண்டான் அரசன். அதன் பின் தங்கத்தில் கை செய்து பொருத்திக் கொண்டான்.அதனால் பொற்கைப் பாண்டியன் என்று அழைக்கப்பட்டார்.

## மனுநீதிச் சோழன்

வீதியில் பசுக்கன்றின் மீது அறியாமல் தேரை ஏற்றிக் கொன்றான் இளவரசன் வீதிவிடங்கன். கதறிய தாய்ப்பசு அரச னின் ஆராய்ச்சி மணியை அடித்தது. விபரம் அறிந்த அரசன் தன் மகனை தேர்காலில் இட்டு கொல்லும் படி பணித்தான். சோழ நாட்டின் ஒரே வாரிசான இளவரசனை கொல்ல எவரும் முன்வரவில்லை. இறுதி யில் அரசனே தன் இளவரசன் மீது தேரை ஏற்றிக் கொன்றார். பசு தன் கன்றை இழந்ததை போல தானும் தன் மகனை இழப்பது தான் நேர்மையான செயலாக மனுநீதிச் சோழன் கருதி னார்.



## ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

கண்ணகியின் கணவன் கோவலுனுக்கு தவறான தீர்ப்பை சொல்லி விட்டோமே என்று அக்கணமே உயிர் துறந்தான் பாண்டிய மன்னன். அரசனோடு சேர்ந்து உயிர் விட்டார் பாண்டிமாதேவி கோப்பெருந்தேவி..

## தசரத பரதன்

அண்ணன் இருக்கும் போது தம்பி அரசாள்வது முறையாகாது என்று பட்டம் துறந்த அண்ணனின் காலணிகளை கொண்டு அதற்கு பட்டம் சூட்டி காப்பாளராக நாடாண்டு, அண்ணன் நாடு திரும்பியதும் நேர்மையாக ஆட்சியை அண்ண னிடம் ஒப்படைத்த அரசன்.

## அரிச்சந்திரன்

பொய் சொல்ல மாட்டேன் என்று இருந்ததால் , தன் நாடு, மனைவி , மக்கள் என அனைத்தையும் இழந்து கடுந்துயரில் வாடினான்.

## ஸ்ரீராஜராஜதேவர்

தன் தந்தை சோழ மன்னர் சுந்தரதேவர் இறந்த தும் வாரிசுப்படி தான் ஆட்சியை ஏற்காமல், அரசுக் குரியவர் தன் சித்தப்பா மதுராந்தகதேவர் என்று ஆட்சியை அவரிடம் ஒப்படைத்தார்.

## சூரிய கர்ணன்

வேண்டுவோருக்கு வேண்டுவதை எல்லாம் மறுக்காது அளித்தவன். தன் கொள்கையில் நேர் மையாக இருந்ததாக கவச குண்டலங்களையும், நல்வாய்ப்புகளையும் இழந்து விண்ணுலகம் சென்றான்.

## பிருத்விராஜ் சௌகான்

ஆப்கான் கொள்ளையன் கோரி போரில் தோற்று மண்டியிட்டு பிருத்வி ராஜிடம் உயிர் பிச்சைக் கேட்டார். ராஜநிதிப்படி கோரியை மன்னித்து ஆப்கான் திரும்ப அனுமதித்தார்.

பிருத்வியின் நேர்மை அவரைக் கொன்றது மட்டும் அல்லாமல் இந்தியாவையே 800 ஆண்டுகள் அடிமையாக்கி , நாட்டு மக்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கியது. தவறானவர்களிடம் நேர்மையாக நடந்து கொள்வதும் தவறு.

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# திருடர்கள் ஜாக்கிரதை

மும்பையில் நடந்த ஒரு வங்கிக் கொள் ளையின் போது... கொள்ளையர்கள் துப்பாக்கி யுடன், அனைவரையும் மிரட்டினர்.

இந்தப் பணம் அரசுக்கு சொந்தமானது, ஆனால், உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்த மானது அதனால், யாரும் எங்களை எதிர்க்க வேண்டாம்! அனைவரும் அசையாமல் கீழே படுங்கள் என்றார்கள் படுத்துவிட்டார்கள்.

**இது மனதை மாற்றும் முறை என்பது.**

அங்கே ஒரு பெண், கொள்ளையர்களின் கவனத்தைத் திருப்ப அநாகரிகமாக நடந்தாள். அப்பொழுது கொள்ளையர்களில் ஒருவன், இங்கு நடக்க போவது கொள்ளை, கற்பழிப்பு அல்ல என்று மிரட்டி, அமர வைத்தான்.

**இதைத்தான், செய்யும் தொழில்களில் கவனம் தேவை என்று சொல்கிறோம்.**

கொள்ளையடித்து விட்டு வீட்டிற்கு வந்தவுடன் கொள்ளையர்களுள் ஒருவன் "வாருங்கள் சீக்கிரம் பணத்தை எண்ணி விடலாம்" என்று.

மற்றொருவன் சொன்னான், பொறு, அவசரம் வேண்டாம். பணம் நிறைய இருக்கிறது. நேரம் அதிகம் செலவாகும். அரசே நாம் எவ்வளவு கொள்ளை அடித்தோம் என்று, நாளை செய்தி களில் சொல்லி விடும்.



**இதைத்தான், படிப்பை விட அனுபவம் சிறந்தது என்போம்!**

கொள்ளை நடந்த போதே, வங்கியின் மேலாளர் இச்சம்பவத்தை காவல் துறையிடம் சொல்ல முனைந்த போது,அவரு டைய மேல் அதிகாரி தடுத்து அவரிடம் கூறினார்.

"வங்கியில் கொள்ளை போனது 20 கோடி தான். நாம் மேலும் 30 கோடி எடுத்து பங்கு பிரித்துக் கொள்வோம். மொத்தமாக ஐம்பது கோடி கொள்ளை போய் விட்டது என்று சொல்லி விடுவோம்" என்றார்.

**"காற்றுள்ள போதே தூற்றிக் கொள், என்பது இது தான்"**

இதை கேட்ட மற்றொரு அதிகாரி "வருடம் ஒரு கொள்ளை, இவ்வாறு நடந்தால் மிக நன் றாக இருக்கும்" என்றார்.

**இதுதான் சுயநலமான உலகம்!**

மறுநாள் செய்திகளில், வங்கியில் 100 கோடி கொள்ளை போய்விட்டது என்று அறிவிக்கப் பட்டது. அமைச்சர் போட்ட உத்தரவு அப்படி. அவர் பங்கு 50 கோடி.

கொள்ளையர்கள் மிரண்டு போனார்கள். பணம் எண்ணும் மிஷின் வாங்கி வந்து,பணத்தை எண்ணத் தொடங்கினர்.

எவ்வளவு எண்ணியும், அவர்களால் இருபது கோடிகளுக்கு மேல் போக முடியவில்லை.

கொள்ளையர்களில் ஒருவன் எரிச்சல் அடைந்து, "நாம் உயிரைப் பணயம் வைத்து இருபது கோடி கொள்ளையடித்தோம். ஆனால் இந்த வங்கி அதிகாரிகளும், அமைச்சரும் சிரமம் இல்லாமல், எண்பது கோடி கொள்ளை அடித்து விட்டனர். படிப்பின் அவசியம் புரிகிறது இப்பொழுது, இதற்குத்தான் படித்திருக்க வேண்டும்" என்றான்.

True Knowledge is nowadays very important than money in this world.

நாடு, இப்படிப்பட்ட திருடர்களாலும், அமைச்சர்களாலும்தான் ஆளப்படுகிறது! பாவம் மக்கள்!

# காதலாகி

அம்மா அவலை, பால், வெல்லம், தேங்காய் சேர்த்து மாலைக்கு டிபன் செய்து இருந்தார்.

மாடி லட்சுமி டீச்சரிடம் ஹிந்தி கற்க வரும் “சிதரா “ராஜனை சிரித்தபடி, ஏதோ கேட்டுவிட்டு, படி ஏறியது, அம்மா பார்த்து இருப்பாள்.

அவளுக்கு இவர்களின் ஏழு வருட பழக்கம் தெரியும்.

thiraimalar.com திரைமலர்

சிதாரா இந்தக் கால தலைமுறை போல, சமைக்க மாட்டேன், ஆணுக்கு அடிமைப்பட மாட்டேன் என் றெல்லாம் பேசுவதும், அதை ராஜன், அவன் அக்கா ரசிப்பதும் அம்மாவுக்கு பிடிக்காது.


“இதெல்லாம் எவன் கிட்ட யாவது வசமா மாட்டும்.”

“அம்மா, அவ அப்பா ஆடிட்டர் கோடிஸ்வரர் ஒரே பெண். அவ ஹிந்தி படிக் கறதே பொழுது போக்கு. உன் வாரிசு மாதிரி, மத்திய அரசு வேலை கிடைக்கும்னு இல்லை “

அம்மா சமாதானம் ஆக வில்லை.

“சரிம்மா. எனக்கு அவல் வை. எவ்ளோ நேரம் தான் வெறும் தட்டை கையில் ஏந்தி நிற்பது?”

“டேய் விளை யாடறியா? உனக்கு போட்டதை சாப்பிட்டு இப்போ பழி என் மேலயா?”



“அம்மா, சத்தியமா நான் சாப்பிடவே இல்லைம்மா. தட்டை வேணா பாரேன்.”

“நீ மாடிக்கு படி ஏறினவ என்ன சுடிதார் போட்டு இருக்கா? ன்னு தானே கவனிச்சு இருப்பே.

உன் கல்யாணம் இவளை மாதிரி ஒருத்தியோட முடிஞ்சா, நான் நிம்மதியா, உட்கார்ந்து சாப்பிட

முடியாதாடா? காலம் முழுக்க எனக்கு சமையல் கட்டே தான் கதியா?"

அம்மா கேள்வியில் வருத்தம் இருந்தது.

அம்மா சொன்ன மாதிரி வீட்டின் இன்னொரு கதவு திறந்து இருக்கும் போது, மாடி ஏறும் பெண்கள் உடை, தெரியும். பலர் லேட்டாக வருவதால் அதை கவனிக்க கூட நேரம் இல்லை. இப்போ பாதி பெண்கள், சுடிதாருக்கு துப்பட்டா கூட போடுவது இல்லை.

வீட்டில் இருந்து எத்தனை விஷயம் தெரிந்து வைத்து இருக்கிறாள்.

அப்பா சாலை விபத்தில் போனபின், அவள் ஒருத்தியாக போராடி குடும்பத்தை இந்த நிலைக்கு கொண்டு வந்து இருக்கிறாள்.

அவள் கருத்துக்களை ராஜன் அக்கா மதுவந்தி, மறுத்தாலும் பேச முடியாது.

"காலம் மாறி போச்சு அம்மா? புரிஞ்சுக்கோ"

"எப்படி. இப்பவும் இருபத்தி நாலு மணி நேரம் தானே ஒரு நாள்?"

"முன்னாள் எல்லாம் ஞாயிறு கடைகள் பெரும்பாலும் மூடி இருக்கும். இப்போ வருமானம் பெறுக, பெறுக ஞாயிறு தான் கடைகளில் கூட்டம் பின்னுது. சுமாரான படம் சன் டி விலன்னா தான் குறுகுத்துறை முருகன் கோவிலுக்கே ஆட்கள் வர்றாங்க. முன்னாள் எல்லாம் டவுணில் இருந்து பெண்கள் வந்து குளித்து, ஈர உடையுடன் வெளியில் நின்று கன்னத்தில் போட்டு ரெண்டு கிலோ மீட்டர் நடந்தே வீட்டுக்கு போவாங்க. இப்போ நாலு அடி போக, பைக்"

"சரி விடு. அவல் இருக்கா இல்லையா?"

"இது அநியாயம். எனக்கு வைச்சதையும் சேர்த்து உனக்குவழித்துபோட்டேன். நீ எவ நினைப்பிலோ சாப்பிட்டு விட்டு, போடலைன்னு என்கிட் டேயே சண்டைக்கு வர்றே. வேலை கிடைத்து, கல்யாணம் ஆனால், இன்னும் என்ன என்ன பேசுவியோ? அதுவும் இந்த சிதாரா கழுதை மாதிரி, அழகான, பணக்கார பொண்ணு வந்தா என் கதி?"



நா. நாகராஜன், ஊரப்பாக்கம்,
போன்:8778935252

"அம்மா. மெதுவா பேசு. மாடிக்கு போனவ டியூசன் முடிஞ்சு வர்ற நேரம்."

"ஓ ஹோ. மாடி ஏறி ஒரு மணி நேரம் ஆச்சு இல்லை. எச்சில் தட்டை ஏன் அதுவரை எந்திக்கிட்டு இருக்க"

"அம்மா பசிக்குதுமா"

"பழைய பீம்சிங் படம். சிவாஜி நடித்தது. "பார்த்தால் பசி தீரும்"

"யார் பார்த்தால் அம்மா?"

அம்மா சிரித்து விட்டாள்.

"இந்த காதல் நிறைவேறுமா?" அக்கா அவனிடம் தனியே கேட்டாள்.

"உன் வாழ்க்கை தான் எனக்கு முதலில் முக்கியம். அவ சமைக்க லேன்னா, நான் சமைச்சு விட்டு போறேன். அம்மாவுக்கு ரெஸ்ட் தான்"

"உன் நல்ல மனசுக்கு நீ நல்லா இருப்பே"

பற்களில் ஒட்டி இருந்த அவல் துண்டு இனித்தது.

காதலாகி, கசிந்து.

பல்சுவைச் செய்திகளை தரும்
திரைமலர்.காம் இணையதளத்தில்
நிருபராக
விரும்புகிறீர்களா?
ஆர்வம் மட்டுமே போதும் பணி அனுபவம் தேவையில்லை,
தொடர்பு கொள்ளவும்.
9444264610

# மீண்டும் பெப்சி உமா...?

அந்த காலத்தில் சின்னத்திரையில் இப்போ திருக்கும் ஆங்கர்களுக்கெல்லாம் முன்னோடி பெப்சி உமா நேரடி நிகழ்ச்சிகளை மிக எளிமை யாக, இனிமையாக, நடத்துவதில் சிறந்தவர்.

மேலும் இடக்கு மடக்கான நேயர்களையும் சிரிப்பாலேயே சமாளிப்பதில் வல்லவர். அதயெல்லாம் தாண்டி அந்த காலத்திய டிவி திரைமுழுதும் ஆக்கிரமித்தவாறே பளிச்சென்று இருக்கும் அவ ரின் மிக அகலமான, இனிமையான, அந்த அழகான சிரிப்பு காண்பவரையெல்லாம் கவர்ந்திழுக்கும் காந்தம்.

பெப்சி உமா என்று சொன்னால் இன்றைக் குக் கூட இளைஞர்கள் துள்ளி குதித்து கொண்டாடுவார்கள். 90 கால கட்டங்களில் போன் பிரபலம் இல்லாத காலத்தில் கூட அதிக ரசிகர்களை கொண்டவர். அதோடு அவருடைய சிரிப்பு ,அழகு, குரல் என அவரை புகழாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

அது மட்டும் இல்லாமல் இவர் சினிமா நடிகை களை விட கொள்ளை அழகும், ரசிகர்களையும் கொண்டவர். அதோடு இவர் என்றும் மாடர்ன் உடைகளை போடாதவர். இவர் அழகாக வண்ண வண்ண புடவைகளை உடுத்தி கொண்டால் போதும் பார்ப்பதற்கு கண்களை கவர வைக்கும். அது தான் அவருடைய கூடுதல் சிறப்பும். இன்று வரை அவர் இடத்தை யாராலும் பூர்த்தி செய்ய வில்லை.

சன் டிவியில் “உங்கள் பெப்சி சாய்ஸ்” என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்க வாய்ப்பு கிடைத்தது. இதை ஆரம்பித்த நாளில் இருந்தே இவருக்கு பல ரசிகர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். பின் ரசிகர்கள் உமாவிடம் பேசுவதற்காகவே பல நாட்கள் காத்து இருந்தார்கள்.




சின்னத்திரையில் ஒரு நிகழ்ச்சியை அதிக வருடங்கள் தொகுத்து வழங்கிய ஒரு தொகுப் பாளரும் ‘பெப்சி உமா’ தான். இந்த உங்கள் சாய்ஸ் என்ற நிகழ்ச்சியை 15 வருடம் உமா தான் தொகுத்து வழங்கி இருந்தார்.

ரஜினி, கமல், மணிரத்னம், பாரதிராஜா என தமிழ் சினிமா ஜாம்பவான்களுக்கு எல்லோரும் இவ ருக்கு சினிமாவில் நடிக்க வாய்ப்பளித்தார்கள். ஆனால்,உமா அவர்கள் எனக்கு விருப்பமில்லை என்று கூறிவிட்டார்

இவ்வாறு சினிமா நடிகர், நடிகைகள் அளவுக்கு பேமஸாக இருந்த பெப்சி உமா, ஒரு கட்டத்தில் மீடியாவை விட்டே ஒதுங்கினார். அதன்பின் அவர் என்ன செய்கிறார் என்கிற தகவல் கூட வெளி யாகாமல் இருந்தது. தற்போது அவர் தனது கணவரின் பிசினஸை கவனித்துக்கொண்டு குடும்பத்தினரும் சந்தோஷமாக வசித்து வருகி றாராம்.

இந்த நிலையில் சமீபத்தில் விருது வழங்கும் விழாவில் பெப்சி உமா கலந்து கொண்டிருந்தார். அவருக்கு சன் டிவியின் கோல்டன் ஐகான் ஆப் டெலிவிஷன் அவார்ட் வழங்கப்பட்டிருந்தது. விருது வாங்கிய பிறகு பெப்சி உமாவிடம் ஏன் சின்னத்திரைக்கு வரவில்லை? என்று கேள்வி கேட்டிருந்தார்கள்.

அதற்கு அவர், நான் இங்கு தான் இருந்தேன். விரைவில் சின்னத்திரையில் சந்திப்போம் என்று கூறியிருந்தார். இப்படி பெப்சி உமா அளித்திருக்கும் பதில் ரசிகர்கள் மத்தியில் சந்தோஷத்தை அளித் திருக்கிறது. ரசிகர்கள் பலரும் பெப்சி உமாவின் வருகைக்கு ஆவலுடன் எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கின்றனர்.

# தாஜ்மஹால் கட்டிடகலை

உலகிலேயே பிரம்மாண்டமான கட்டிட கலைகளில் சிறந்தவர்களை ஆக்ராவிற்கு வரவழைத்து 37 நபரை மஹாலின் வரைபடம் வரைய செய்தார். அப்போது அவர் கட்டிட கலைஞரிடம் நிபந்தனை விடுத்தார்.

அது என்ன வென்றால் தாஜ்மஹால் மும்தாஜியின் குணம் அழகு போன்றவற்றை பறைசாற்றும்படி இருக்க வேண்டும் என கூறி கட்டிட கலைஞரிடம் சிறப்பாக கட்டிடம் அமைய வேண்டும் என்று கூறினார் ஷாஜஹான்.

இந்த கட்டிட கலை வல்லுநர்கள் கட்டிட கலை மட்டுமின்றி வானிலை பற்றியும் தெரிந்திரிந்தவர்கள் இவர்கள் கால நிலைக்கு ஏற்றபடி கட்டிடங்கள் கட்டுவர்.

அதன்படி ஆக்காராவில் தாஜ்மகால் கட்டுவதற்கு ஏற்ற இடமா சரியான கால நிலையையும் யமுனை நதி கரையில் கட்டலாமா என பலவற்றை ஆராய்ந்த பிறகுதான் கட்டவே ஆரம்பித்தனர்.

இந்த ஆக்ரா கரையில் ஒரு இடத்தில் ஆழமாக தோண்டப்பட்டு மரதூண்கள் அடியில் மிகவும் கடினமாக இருக்கும்படி யமுனை ஆற்றின் உப்பை தாங்கும் அளவிற்கும் கடினமான தூண்களை அடியில் வைத்தனர்.

இதனுடன் சில கற்களையும் வைத்தனர். இது எதற்கென்றால் நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றங்கள் வந்தாலும் தாஜ்மஹால் ஒன்றும் ஆகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தாஜ்மஹால் அடியில் கடினமான தூண்களை வைத்துள்ளனர்.

இதற்கு மேல் தான் தாஜ்கஹால் தளம் அமைக்கப் படுகிறது. இந்த தாஜ்மஹால் வெண்மையாக இருக்க காரணம் இது மும்தாஜின் குணத்தை பிரதிபலிக்கும் வகையிலும் அழகை பிரதிபலிக்கும் வகையிலும் உலகில் பல இடங்களி லிருந்தும் விலை மதிப்பில்லாத கற்கள் வரவழைக்கப் பட்டது.

இதில் சீனா, திபெத், ஆப்கானிஸ்தான் போன்ற பல நாடுகளிலிருந்து பலவண்ண கற்கள் வரவழைக்கப்பட்டது. இந்த வர்த்தகத்திற்கு ஆயிர கணக்கில் குதிரை யானைகள் போன்றவற்றை பயன்படுத்தினர்.

தாஜ்மஹால் கட்டுவதற்கு பல கற்கள் பயன் படுத்தினர் இதில் பூக்கள் போன்ற பளிங்கு கற்கள் தாஜ்மஹால் சுவர்களில் பொறிக்கப் பட்டிருக்கும்.

இந்த பூக்களை செதுக்க இத்தாலியில் உள்ள கலை வள்ளுநர்கள் வரவழைக்கப் பட்டன். இந்த தாஜ்மஹாலில் வெளிபுறத்தில் 4 தூண்கள் கட்டப் பட்டுள்ளத்து. இந்த 4 தூண்கள் வெளிப்புறமாக சாய்ந்தது போல் காணப்படும்.

இது ஏன் இவ்வாறு கட்டப்பட்டுள்ள தென்றால் இயற்கை சீற்றத்தால் இந்த தூண் தாஜ்மஹால் மீது விழாமல் இருக்க வெளிப்புறம் சாய்ந்த மாதிரி கட்டப் பட்டுள்ளது. இதன் மையத்தில் ஒரு தங்க கோபுரமும் வைக்கப் பட்டுள்ளது.

இந்த தாஜ்மஹால் 1653ம் வருடம் கட்டி முடிக்கப் பட்டது.



# சமூக சேவகர்களாக விளம்பரம் தேடும் நடிகர் நடிகைகள் மத்தியில்

# பாலா செய்யும் தரமான சம்பவங்கள்

உதவி செய்வதற்கு ஒரு மனம் வேண்டும், வசதி வாய்ப்பு இருந்தாலும், மக்கள் படும் வேதனையை எண்ணி வருந்துவதுடன், மற்றவரை உதவி செய்ய சொல்லி அறிக்கையும், பேட்டியும் கொடுத்ததுடன் தன் சேவை முடிந்தது என்று தான் சம்பாதித்ததை அனுபவிக்க செல்பவர்கள் பலர் உண்டு.

சமீபத்தில் கூட நடிகர் சூர்யா மாணவர் நலனைப் பற்றி அதிகம் பேசிவிட்டு, கம்யூனிஸ்ட் எம்பி.வெங்கேடஷ் மற்றும் சூர்யா குடும்பத்தினரின் வருகையால் அருங்காட்சியகத்தை பார்வையிட வந்த மாணவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால் சுடும் வெயிலில் பல மணிநேரம் கால்கடுக்க காத்திருந்து அதனால் பல மாணவர்கள் மயக்கமடையும் நிலையை அடைந்ததாக செய்திகள் வெளிவந்தது.

சூர்யா குடும்பத்தினர் மற்றும் எம்.பி.சு.வெங்கடேஷ்க்காக மாணவர்களை ஏன் தடுத்து நிறுத்தினர், மேல்ஜாதி கீழ்ஜாதி பிரச்சனையைவிட இதுபோன்ற



thiraimalar.com
திரைமலர்



thiraimalar.com
திரைமலர்



விஜபிக்களால் மக்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக கண்டனக் குரல் எழும்பியது.

அதேப்போன்று, மாணவர்களின் படிப்புக்கு உதவி செய்யுங்கள் என்று பிக்பாஸ் பிரபலம் அமிர் என்பவர் ஷோசியல் மீடியாவில் பேட்டி கொடுத்துவிட்டு, தனது காதலியுடன் வெளிநாடு சென்று தங்கிய வீடியோவை தனது யூடியூப்தளத்தில் பதிவிட்டார், அதில் ஒரு நாள் ஹோட்டல் வாடகை 2 இலட்சம் என்று கூறி வீடியோவை பதிவேற்றினார்.

இவர் நினைத்திருந்தால் யாரிடமும் பிச்சை கேட்காமல் அந்த மாணவர்களுக்கு உதவி செய் திருக்க முடியும், ஆனால் வெளியில் சமூக சேவை செய்வதைப் போன்று பாவனை செய்துவிட்டு, உல்லாச வாழ்க்கை வாழும் இதுபோன்று பலர் தற்போது சமுதாயத்தில் உள்ளனர்.

ஒட்டுமொத்தமாக சமூகவலைதளங்களில் தங் களை சமூக சேவகர்களாக காட்டிக்கொள்ளும் நடிகர், நடிகைகள் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை சேவைக்காக ஒதுக்கி வைத்தாலே போதும், தமிழகத்தில் பலரின் வாழ்வாதாரம் மேம்படும்.

மீடியா முன்னால் உதவி செய்ய கருத்து கூறுபவர்களால், நேரில் உதவி செய்ய மனம் வருவதில்லை என்பது பல்வேறு நிகழ்வின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆனால் இந்த மீடியாத்துறையிலேயே மிகவும் வித்தியாசமாக, அதிகப்படியான வருமானம் இல் லாத ஒரு நபர், தன் சக்திக்கும் மீறி மிகப் பெரிய உதவிகளை மக்களுக்கு செய்து வருகிறார் என்றால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

இவர் திரைத்துறையில் வலம் வரவில்லை, மாறாக இதுவரை சின்னத்திரையில் மட்டுமே வெளிவரும் ஷோக்களில் மட்டுமே பங்கு பெற்று, அதன்மூலம் வரும் வருமானத்தை மிகச் சிறந்த ஆக்கப்பூர்வமான வகையில், உண்மையில் தேவைப்படும் மக்களுக்கு செலவழித்து வருவதிலிருந்து இவரின் சேவையின் ஆழம் புரியும்.

சின்னத்திரையில் கலக்கப்போவது யாரு இந்த நிகழ்ச்சி மூலம் பிரபலமாகியவர் ரிறிசீ பாலா. அதன்பின் குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் பாலாவிற்கு என்று பெரிய ரசிகர் பட்டாளத்தை பெற்றார். பாலா செய்யும் சேட்டைகள் ரசிகர்களால் பெரிதாக ரசிக்கப்பட்டது. விஜய் டிவியில் சில நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கி வரும் ரிறிசீ பாலா மலைவாழ் மக்களுக்கு தனது சொந்த செலவில் ஆம்புலன்ஸ் வாங்கி கொடுத்தது பலரையும் வியக்க வைத்துள்ளது.

KPY பாலா அவர்கள் தான் பிறந்தநாளில் ஏதா வது ஒரு நல்லதை செய்தே ஆக வேண்டும் என்று எண்ணத்தோடு ஆதரவற்ற முதியோர் இல்லத்திற்கு ஒரு ஆம்புலன்ஸ் வாங்கி கொடுத்தார்.

இதைக் கேள்விபட்ட ஈரோட்டுவாசி ஒருவர் பாலாவை தொடர்பு கொண்டு, "ஈரோடுமாவட்டத்தில் 12 கிராமங்கள் உள்ளது அங்கு வாழும் மலைவாழ் மக்கள் பாம்பு கடித்தாலும் மற்ற விலங்கினால் தாக்கப்பட்டாலும் அல்லது மாரடைப்பு ஏற்பட்டாலும் 18 கிலோமீட்டர் தாண்டி கடம்பூர் சென்று தான் மருத்துவம் பார்க்க முடிகிறது அதற்குள் சிலர் உயிரை இழக்கின்றனர். அவர்களுக்கு ஆம்புலன்ஸ் கிடைத்தால் இன்னும் உதவியாக இருக்கும்" என்று கூறியுள்ளார்.

அதனைக் கேட்ட பாலா சில மாதங்கள் கடின




உழைப்பை போட்டு பல நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அதில் கிடைக்கும் சில தொகையை சேர்த்து வைத்து எப்படியாவது அந்த மக்களுக்கு ஆம்புலன்ஸ் வாங்கி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சமீபத்தில் மலைவாழ் மக்களுக்கு ஆம்புலன்ஸ் வாங்கிக் கொடுத்துள்ளார்.

இது பற்றி செய்தியாளர்களிடம் பேசிய பாலா என் அப்பா பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறார். அம்மா வீட்ல இருக்காங்க. இது என்னுடைய தகுதிக்கு மீறியது தான். நான் யாரிடமும் பணம் வாங்கி இதனை செய்யவில்லை நான் சம்பாதித்த என்னுடைய சொந்த காசுல தான் இந்த உதவியை செய்து வருகிறேன்.

இப்படி உதவி செய்யும் போது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது பணம் சம்பாதித்து இதுபோல நிறைய உதவிகளை செய்ய வேண்டும் என்பது எனக்கு ஆசை. இப்போது நான் செய்யும் செயலையை என்னுடைய தகுதிக்கு மீறியது.

நான் சம்பாதிக்கும் காசை சேர்த்து வைத்து இதை செய்து வருகிறேன். இன்னும் எப்படியாவது ஒரு பத்து ஆம்புலன்ஸ் வாங்கி கொடுப்பேன் கொரோனா காலகட்டத்தில் ஆம்புலன்ஸ் எவ்வளவு முக்கியம் என்பது அனைவருக்கும் புரிந்திருக்கும். அது மட்டுமல்லாமல் தற்பொழுது வழங்கி உள்ள ஆம்புலன்ஸில் மொபைல் ஐ சி யு வசதி செய்யப்பட்டுள்ளது, இது கண்டிப்பாக இந்த மக்களுக்கு மிக அவசியமானதாக இருக்கும்" என்று கூறினார்.

உண்மையில் இது ஒரு மிகப்பெரிய உதவிதான், வெயிலில் காய்ந்தவனுக்குத்தான் நிழலின்



மகத்துவம் தெரியும் என்பது போல மருத்துவம் இன்றி வாடிய மக்களுக்கு இந்த ஆம்புலன்சின் சேவை மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்று நம்மால் அறியமுடிகிறது.

சினிமாத்துறையை பொறுத்தவரை பலர் பலருக்கு தெரியாமல் எவ்வளவோ உதவிகளை செய்து வந்தாலும், ஒருசிலர் வெளிவேஷத்துக்காக மக்கள் மீது அக்கறை உள்ளது போன்று காட்டிக் கொண்டு, மற்றவர்களுக்கு அட்வைஸ் செய்தாலும் மக்கள் இவர்களின் செயலைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொண்டே உள்ளனர்.

அந்த வகையில் தனக்கிருக்கும் பணத்தில் உதவி செய்யும் நல்லவர்களை பாராட்டாமல் இருக்கக் கூடாது, அதைவிட தனது தேவையே சேவையாக கொண்டு செயல்படும் பாலா போன்றவர்களை அதிகமாக ஊக்குவிக்க வேண்டும்.

# அறுகம்புல் வெங்காயம் ஊறுகாய்

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| ONION BIG PASTE: | 5NOS |
| ARUGAMPUL JUICE: | 200ML |
| OIL | 100ML |
| MUSTERD SEED: | 1TSP |
| FENUGREEK: | ½ TSP |
| CHILLI POWDER-: | 3TSP |
| TURMERIC POWDER: | ¼ TSP |
| SALT: | AS REQUIRE |
| TAMARIND: | 50GMS |
| CURRY LEAF: | 10LEAFS |

செய்முறை

ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, வெந்தயம், கறிவேப்பிலையை நன்றாக வறுத்து அதில் தேவையான அளவு வெங்காயத்தை அருகம்புல் ஜூஸ் ஊற்றி நன்றாக மைய அரைத்து கொள்ள வேண்டும் .

பிறகு அந்த கடாயில் போட்டு நன்றாக பச்சை வாசனை போகும் வரை வதக்க வேண் டும். அதில் சிறிதளவு மஞ் சள் தூள் மற்றும் மிள காய் தூள் சேர்த்து நன்றாக வதக்க வேண்டும்.



ஊறுகாய் நன்றாக கெட்டியாகி எண்ணெய் மேலே வரும் பொழுது உப்பு மற்றும் சிறிதளவு புளி ஊற்றி நன்றாக கொதிக்க வைத்து இறக்க வேண்டும்.

சுவையான அருகம்புல் வெங்காய ஊறுகாய் ரெடி.

# கம்பு துவையல்

## தேவையான பொருட்கள்

நல்லெண்ணெய் 3 டேபிள்ஸ்பூன
உளுத்தம் பருப்பு 50 கிராம்
கடலைப்பருப்பு 50 கிராம்
கம்பு 150 கிராம்
தேங்காய் 50 கிராம்
பெரிய வெங்காயம்
நறுக்கியது 100 கிராம்
கறிவேப்பிலை ஒரு கொத்து
மிளகாய் தூள் 2 டேபிள்ஸ்பூன்
உப்பு தேவைக்கேற்ப
கடுகு ஒரு டேபிள்ஸ்பூன்
காய்ந்த மிளகாய் 4, இஞ்சி 1 துண்டு

## செய்முறை

ஒரு கடாயில் நல்லெண்ணெய் ஊற்றி உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை போட்டு நன்றாக வதக்க வேண்டும். பெரிய வெங்காயத்தை, இஞ்சி, மற்றும் கம்பு போட்டு வதக்க வேண்டும். வெங்காயம் நன்றாக வதங்கிய பிறகு, மிளகாய் தூள், உப்பு, தேங்காய் போட்டு கிளற வேண்டும்.

நன்றாக சூடு ஆறிய பிறகு மிக்ஸியில் போட்டு தண்ணீர் ஊற்றி அரைக்க வேண்டும். ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம் பருப்பு, சீரகம், ஒரு கப் தண்ணீர்,அரைத்த விழுது போட்டு வதக்க வேண்டும். பச்சை வாசனை சென்றபிறகு உப்பு சரி பார்த்து, இறக்க வேண்டும். இந்த துவையலை தோசை, சாதம், சப்பாத்தியுடன் உண்ணலாம்.





# கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

# இணையும் தூரங்கள்

திருநெல்வேலி ரெயில்வே கேன்டீன். எதிரெதிரே பாலாஜியும்... உஷாவும்.
'டீ மட்டும் போதுமா உஷா'?.... கேட்டான் பாலாஜி.
"ம்"... போதும் என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள் உஷா. இறுக்கமானமுகத்தோடு. இருவருக்கும் இடையில் ஒரு பெரிய மௌ னம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.



"இறுதியாக உன் முடிவு என்னதான்"? உஷா...

"திரும்பத் திரும்ப அதே பதிலைச் சொல்லி என்னை சித்திரவதை செய்யாதே"...! உடைந்த குரலில் பாலாஜி.

"இல்லை பாலா நீங்கள் எத்தனை முறை கேட்டாலும் என்னுடைய முடிவு இதுதான். நாம் பிரிவது தான் எல்லோருக்கும் நல்லது"..

அதே இறுக்கத்தோடு உஷா.

இரண்டு பேருமே திருச்செந்தூரில் வேலை பார்ப்பவர்கள். நெல்லையிலிருந்து தினமும் சென்று வருகிறார்கள்.

பாலாஜி ஒரு அரசு ஊழியன். உஷா அவன் அலுவலகத்திற்கு எதிரே உள்ள தனியார் நிறு வனத்தின் வேலை செய்பவள்.

ஒரு நாள் ரயில் நிலையத்தில் உஷா தவற விட்ட அவளது மணிபர்ஸை பாலாஜி எடுத்துக் கொடுத்ததிலிருந்து..

"ஹலோ இன்று ஏன் லேட்"..!? இன்னைக்கு கூட்டம் அவ்வளவா இல் லைலா..!? என்று பேச ஆரம்பித்து. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு... குடும்ப நிலவரங்களை பரிமாறிக் கொண்டு...

அது காதலாக மாற... என்ன ஆனாலும் சரி... வீட்டில் அனைவரின் சம்மதத்தோடு திரு மணம் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தி ருந்தனர்.

வீட்டில் சொல்லிட சந்தர்ப்பம் பார்த்து காத்தி ருந்தனர்.. எதிர்பார்த்த நாளும் வந்தது.

இருவரின் குடும்பமும் சமூகத்திலிருந்து விதிவிலக்கு பெற்றது அல்லவே. எதிர்ப்பு அலை கிளம்பியது.

பாலாஜி தன் வீட்டில் சொன்னவுடன் யாரும் எதுவும் சொல்லவில்லை.

இரண்டு நாள் அமைதியாக சென்றது...

மூன்றாம் நாள் பாலாஜி மீண்டும் சொல்ல ஆரம்பிக்க... புயல் ஒன்று உருவானது.

பாலாஜியின் அப்பா

"டேய் பாலா, நீ சம்பாத்தியம் பண்ணி எங்களை எல்லாம் காப்பாற்றுகிறோம் என்று நினைப்பு தானே... இப்படிப்பட்ட முடிவை எடுக்கச் சொல்லுது. ஏதோ எனக்கு கிடைச்ச வேலையில்... சொற்ப சம்பளத்தில்.. உன்னையும் உன் தங்கச்சியையும்

ஓரளவுக்கு படிக்க வச்சு கௌரவமாக வளர்த்து இருக்கேன். உனக்கும் ஒரு அரசு வேலை கிடைச்சிருக்கு. அதுக்கும்நான் தான் வழிவகை செய்தேன். அதற்கு காட்ற நன்றி இது தானடா..? என்று கோபத்தில் கத்தினார்.

"அப்பா நன்றி.. அது இதுன்னு பெரிய பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதீங்க... பாலாஜி தழு தழுத்த குரலில்.

"நான் ஒண்ணுமே சொல்லலடா... நீ அவ ளையே கட்டிக்க... அவ என்ன ஜாதியோ? என்ன குலமோ...!?

முதல்ல கல்யாணம் முடிச்சு கொஞ்ச நாள் எங்க கூட இருப்ப... பிறகு போய் வர சிரமமா இருக்குன்னு. திருச்செந்தூரிலே வீடு பார்த்து அங்க தனியா போயிருவே.. எங்களை அம்போனு விட்டுவிடுவே... நீ இப்படி ஒரு காரியத்தை செய் தால்... இனிமே உன் தங்கச்சி யார் கட்டிக்குவா!? நான் எப்படி கட்டி கொடுப்பேன்.

எப்படியும் போ... அப்படி ஒன்றும் மட்டும் நடந் துச்சு என் முகத்திலேயே முழிக்காதே... என்று ஆவேசமாக சொன்னார்.

அப்படி எல்லாம் பேசாதீங்கப்பா... உங்க யாரையும் ஒரு நாளும் நான் கைவிடமாட்டேன். என்னை நம்புங்க.. என்னுடைய ஆசைக்குசம்மதம் சொல்லுங்கப்பா.. உங்க சம்மதத்தோடதான்கல்யா ணம் பண்ணனும்னு முடிவுல நாங்க இருக் கோம்.

இப்படி பாலாஜி எவ்வளவு சமாதானம் சொல் லியும் பலனில்லாமல் போனது.

அம்மாவும் தங்கச்சி மேனகாவும் ஒன்றுமே பேசவில்லை. பாவம் அவர்கள் அப்பாவின் முன்னால் வாயில்லா பூச்சிகள்.

உஷாவின் வீடு.

கதாபாத்திரங்கள் தான் வேறு வேறு.. திரைக் கதை வசனம் ஒன்று போலத்தான்.. அங்கே அப்பா என்றால் இங்கே அம்மா...

ஆமாடி... உன் சம்பாத்தியம் தான் எங்களை காப்பாத்து கிறது என்ற திமிர் உனக்கு.. உனக்கு நாங்க எக்கேடு கெட்டா என்ன போ..

கல்யாணம் பண்ணிட்டு போ.. உனக்கு கீழ இன்னும் ரெண்டு தங்கச்சி இருக்காங்க...

அவங்களுக்கு கல்யாணம் பண்ண நான் என்ன செய்வேன்...!? அதை பத்தி உனக்கு என்ன கவலை.. உனக்கு உன் காதல் பெருசு...

இதையும் மீறி அவன் தான் முக்கியம் என்று கல்யாணம் பண்ணிக்கிட்டேனு வை. எங்க யாரையும் நீ உயிரோட பார்க்க முடியாது.. என்று சொல்ல சூழ்நிலை மோசமாகி போனது.

இந்த சூழலில் தான் கேண்டீனில்... பாலாஜி உஷாவும்.

"என்ன சொல்ற உஷா..? இது முடியுமா!?

நாம பிரிந்து போவது அவ்வளவு எளிதான காரியமா? வேண்டாம் உஷா யோசனை பண்ணு வோம்.. முதல்ல கல் யாணம் முடித்து விடு வோம்.. பின்பு வீட்டில் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம் என்றான் பாலாஜி.



நெல்லை
கவி.க.மோகனசுந்தரம்.
போன்: 9865782742

பைத்தியக்காரத்தனமா பேசாதீங்க... பாலா... குடும்ப சம்மதத்தோடு தான் நம்ம கல்யாணம் நடக்கணும். ஏற்கனவே நாம முடிவு பண்ணிட் டோம்.. மீறி நாம கல்யாணம் பண்ணா உங்க வீட்லயும்... என் வீட்லயும் உள்ளவங்க எடுக்க போற முடிவை நினைச்சா ரொம்ப பயமா இருக்கு.. கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியல..

தயவுசெய்து நீங்கள் சொல்லும் அந்த முடிவு வேண்டவே வேண்டாம் என்று கண்டிப்பாக கூறி னாள் உஷா.

கொஞ்சம் பொறுமையா யோசி உஷா... நமக்கும் எதிர்காலம் இருக்கிறது...

நம்ம வாழ்க்கையை நாமும் பாக்கணும் இல்ல.. என்று சொன்னான் பாலாஜி.

இல்ல அது சரிப்பட்டு வராது என்று மீண்டும் மறுத்தாள் உஷா.

அப்படின்னா நம்ம காதல் இந்த ரயிலோடு முடிஞ்சு போகணுமா...

இதுல வர்ற பயணிகள் போல அவங்க அவங்க நிறுத்தத்தில் இறங்கி போயிடற மாதிரி நாமும் போக வேண்டியது தானா!? இதுக்கா நம்ம காதலிச்சோம் பதறினான் பாலாஜி.

பாலா முதலில் நீங்கள் ஒன்றைபுரிந்து கொள்ள வேண்டும்... நம் முடைய இரண்டு குடும்ப மும் நம்மை... மட்டுமே நம்பி இருக்கிறது.

அவர்களை... அவர்கள் எப்படி போனால் என்ன என்று... அப்படியே விட்டு விட முடியாது.. நாம் ஒன்றும் சுயநல பிசாசுகள் இல்லை.

நம் காதலும்



ஜெயிக்கணும் ஆனா அதே நேரத்தில் குடும்பமும் அமைதியாக இருக்கணும் என்று நினைக்கிறேன்.

அவங்க ஆசிர்வாதத்தில் நடக்கிற கல்யாணம் தான் நமக்கும் மகிழ்ச்சியை தரும்.. அவங்க வயிற்றெரிச்சலில்.. அவர்களின் கோபத்தில்... அவர்கள் கண்ணீரில்... நமது கல்யாணம் நடக்கக் கூடாது என்று நினைக்கிறேன்..

என்ன சொன்னீங்க ரயில்ல வர பயணிங்க மாதிரி இறங்கி போகணுமானு...!? அப்படி இல்ல பாலா...

நாம அந்த பயணிகள் மாதிரி இல்ல... அந்த பயணிகள் நம்புகின்ற ரயில் அல்ல நாம்... நாம் இந்த ரயிலே நம்புகின்ற தண்டவாளங்கள் மாதிரி.

ஏன்னா நம்ம குடும்பம் நம்ம மேல தான் பயணம் செய்து செய்கிறது. பயணிகளை பத்திர மாக ஊர் கொண்டு சேர்க்கும் தண்டவாளங்கள் ஒருபோதும் இணைவதில்லை..

ஆனால் நம்பியவர்களை பத்திரமாக கொண்டு போய் சேர்க்கிறது... தான் இணையாமல் தூரங்களை இணைக்கிறது. அதுபோலத்தான் நாமும் நம்மை நம்பி பயணிக்கும் நம் குடும்பத் திற்காக.. அவர்களின் நிலை.. ஆசை.. கனவு... இவையெல்லாம் தடம் புரளாமல் இருப்பதற்காக... நாம் இணையாமல் இருந்து அவர்கள் கனவுகளின் தூரங்களை இணைப்போம் பாலா..

நமது ஆசைக்காக...

நமது சுயநலத்திற்காக...

நமது எதிர்காலத்திற்காக...

நாம் இணைந்து நம்மை நம்பி இருக்கும் குடும்பம் எனும் ரயிலை கவிழ்ப்பது என்ன நியாயம்...?

அதனால் வரக்கூடிய கஷ்டம்.. நஷ்டம்... அவமானம் எல்லாமே நமக்கு தானே..

இதையெல்லாம் தவிர்க்க நாம் அந்த தண்டவாளம் மாதிரி இருப்போம் பாலா..

இதெல்லாம் உங்களுக்கு ஜீரணிக்க கஷ்ட மாகத்தான் இருக்கும்... எனக்கும் அப்படித்தான் இருக்கிறது... என்ன செய்வது பாலா..?

நாம் இப்படி ஒரு சூழலில்..

சமூகத்தில் பிறந்து விட்டோம்.. ஆசையை வளர்த்துக் கொள்வதற்கு முன்னால்... அதற்கான வசதி வாய்ப்பு தகுதி நமக்கு இருக்கிறதா என்பதை நாம் மட்டுமல்ல...

நம்மைப் போல அனைவரும் யோசிக்க வேண்டும் பாலா..

நம்ம சந்தோஷத்தை விட மத்தவங்க சந்தோ ஷத்துக்கு மதிப்பு முக்கியத்துவம் கொடுப்போம் பாலா.

ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க..! இதுதான்நம்ம ரெண்டு பேருடைய குடும்பத்துக்கும் நல்லது.. கடவுள் அருள் இருந்தால் நடக்க வேண்டியது நமக்கு நடக்கும் பாலா... அப்படி இல்லையென்றால் நடப்பது எதுவானாலும் ஏற்றுக் கொள்ள வேண் டும். இதுவே சரியான முடிவு... என்று மனதில் உள்ள சோகத்தை எல்லாம் அடக்கி வைத்துக் கொண்டு அதே இறுக்கத்துடன் ஆனால் உறுதியாக சொல்லி முடித்தாள் உஷா.


பாலாஜியும் அனைத்தையும் புரிந்து கொண்டு.. ஆனாலும் மனதில் பாரத்துடன் சரி என்பது போல் தலையாட்டினான்.

தூரத்தில் ரயில் வரும் ஓசை கேட்டது..



செப்டம்பர் 1 முதல் புத்தம் புதிய பொலிவுடன்
வாரந்தோறும் பண்முகச் செய்தியுடன் உங்கள்
thiraimalar.com
திரைமலர்
உங்கள் விருப்பமான துறையில்,
சாதிக்க விரும்புபவர்கள், உங்களைப் பற்றிய
தகவலை எங்களுக்கு தெரிவியுங்கள்....
வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம் 9444264610
www.thiraimalar.com இணையதளத்திலும்,
thiraimalar E-Magazine இல் வெளியீட்டு


# சென்னையும் ஏரியாவின் பெயர்களும்




சென்னை இன்று மிகப்பெரிய மாநகரமாக விளங்க காரணம், பல சிறு சிறு கிராமங்களின் இணைவு தான்...

சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் பல கிராமங்கள் இணைந்து சென்னை பிரமாண்டமாய் உருவெடுத்துள்ளது...

அப்படி இணைந்த கிராமங்களின் பெயர்கள் உருவானதின் பின்னணியை தெரிந்து கொள்வது சுவாரஸ்யமான ஒன்றே...

108 சக்தி ஸ்தலங்களில் 51வது ஊர். ஆகையால் ஐம்பத்து ஒன்றாம் ஊர் என்று அழைக்கப்பட்டு, பின்னாளில் இவ்வூர் **அம்பத்தூர்** என மாறியது...

chrome leather factory இப்பகுதியில் அதிக அளவில் இருந்ததால் இப்பகுதி **குரோம் பேட்டை** என அழைக்கப்படலாயிற்று...

17,18ம் நூற்றாண்டுகளில் நவாப் ஒருவரின் கட்டுப்பாட்டில் இருந்தது இப்பகுதி. அவருடைய




குதிரைகளின் பசியை போக்கும் நந்தவனமாக இது விளங்கியதால், garden of horses என்னும் பொருள் படும் Ghoda bagh என்று உருது மொழியில் பெயர் வைத்தார். பின்னாளில் அதுவே **கோடம்பாக்க**மாக மாறியது...

மகப்பேறு என்பதே மருவி **முகப்பேர்** ஆனது...

தென்னை மரங்கள் நிரம்பிய பகுதி அது. ஆகையால் தென்னம்பேட்டை என பெயர் வைத்தார்கள். பிற்பாடு அது **தேனாம்பேட்டை**யாக மாறிப்போனது...

சையிது ஷா பேட்டை தான் **சைதாபேட்டை** என அழைக்கப்படுகிறது...

முற்காலத்தில் வேதஸ்ரேணி என அழைக்கப்பட்டது தற்போதைய **வேளச்சேரி**...

உருது வார்த்தையான che bage (six gardens என்பது இதன் பொருள்) என்பதிலிருந்து உருவானது தான் **சேப்பாக்கம்...**

சௌந்தர பாண்டியன் பஜார் என்பதின் சுருக்கமே **பாண்டி பஜார்**...

சிவபெருமானுக்கு உகந்த வில்வமரங்கள் அதிகம் இருந்ததால் மகாவில்வம் என அழைக்கப்பட்ட இப்பகுதி, பின்பு மாவில்வம் என்றாகி, காலப் போக்கில் எப்படியோ **மாம்பலமா**கி விட்டது...

பல்லவர்கள் ஆட்சி செய்ததால் பல்லவபுரம் என்றழைக்கப்பட்ட இடம் தான் **பல்லாவரம்**...

சென்னை மாகாண முதல்வராக இருந்த பனகல் ராஜாவின் நினைவாக இவ்விடம் **பனகல் பார்க்** என அழைக்கப்படுகிறது...

நீதி கட்சி தலைவர் சர். பி.டி.தியாகராஜன் செட்டியின் பெயராலேயே இப்பகுதி **தியாகராய நகர்** என அழைக்கப்படுகிறது(தி.நகர்)...

புரசை மரங்கள் மிகுதியாக இப்பகுதியில் இருந்ததால், இப்பகுதி**புரசைவாக்கம்** ஆனது...

அதிக அளவில் மல்லிகை பூக்கள் பயிரிடப்பட்ட பகுதி இது. திருக்கச்சி நம்பி ஆழ்வார் தினமும் இங்கிருந்து பூக்களை பறித்துக்கொண்டு சென்று காஞ்சி வரதராஜபெருமாளை வழிபட்டு வந்தார். அதனால் இவ்விடம் சமஸ்கிருதத்தில் புஷ்பகவல்லி என்றும், தமிழில் பூவிருந்தவல்லி என்றும் அழைக்கப்படுகிறது. பின்னாளில் இது **பூந்தமல்லி**யாக மாறியது. வல்லி என்பது தெய்வத்தை குறிக்கும் ஒரு பெயர்...

17ம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்து வந்த ஒரு முஸ்லீம் துறவி 'குணங்குடி மஸ்தான் சாகிப்'. இவரது சொந்த ஊர் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டி. ஆகையால் அப்பகுதி மக்கள் அவரை தொண்டியார் என அழைத்தனர். அந்த ஏரியா தான் தற்போதைய **தண்டயார்பேட்டை**...

முன்பு இப்பகுதி ஆடு மாடுகள் மேயும் திறந்தவெளியாக இருந்துள்ளது. அதனாலேயே **மந்தைவெளி** என்றழைக்கபடுகிறது...

மயில் ஆர்ப்பரிக்கும் ஊர் என்பதே **மயிலாப்பூர்** என மாறிப்போனது...

பல்லவர்கள் காலத்தில் போர்கள் நடத்த இவ்விடத்தையே பயன்படுத்தியதால், இப்பகுதி **போரூர்** எனப்படுகிறது...

சில நூறு வருடங்களுக்கு முன்பு இப்பகுதி முழுவதும் மூங்கில் மரங்கள் இருந்தது. அதனாலேயே **பெரம்பூர்** எனப்படுகிறது...

திரிசூல நாதர் ஆலயம் இருப்பதால் இந்த ஏரியா **திரிசூலம்** என்று அழைக்கப்படுகிறது...

பார்த்தசாரதி கோவிலின் எதிர்ப்புறம் இருக்கும் குளத்தில் நிறைய அல்லிகள் பூக்கும். அதன் காரணமாக இப்பகுதிக்கு திருஅல்லிக் கேணி என பெயர் உருவாக்கி, பின்பு **திருவல்லிக்கேணி**யாகி, தற்போது triplicane என மாற்றம் கண்டுள்ளது...

தாமஸ் பாரி என்பவர் இப்பகுதியில் வணிகம் செய்துவந்தார். மக்கள் மத்தியில் மிகவும் மதிப்பு பெற்றிருந்த அவரின் பெயராலேயே இப்பகுதி **பாரிமுனை** (பாரிஸ் கார்னர்) ஆனது...

வள்ளிசேரி பாக்கம் என்பதே மருவி பின்னால் **வளசரவாக்கம்** என மாறியது..!

# இதுவரை வெளிவந்த இதழ்களை




thiraimalar.com
திரைமலர்
**www.thiraimalar.com**

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

## இணையதளங்களில் இலவசமாக படிக்கலாம்

வாரம்தோறும் நமது இதழை பெற உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

அனுப்ப வேண்டிய இ–மெயில் முகவரி

**thiraimalarebook@gmail.com**

**Whatsup- 9444264610**


Owned, Published by N.Geetharani. Design by SMLGraphics, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : N.Geetharani, Cell: 9444264610.
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com